**தேதி. 14.02.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600003**

**கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மைக்கான வரைவு வழிகாட்டுதல்கள்**

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 (மத்திய சட்டம் 29, 1986) பிரிவு 3,6 மற்றும் 25ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை நிர்வகிப்பதற்காக, திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ மத்திய அரசு உருவாக்கியுள்ளது. கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 ஒவ்வொரு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும். இது அவர்களின் பிராந்திய பகுதிக்குள், இந்த விதிகளை செயல்படுத்துவதற்கும், கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், பிரித்தெடுத்தல், போக்குவரத்து, செயலாக்கம் மற்றும் அகற்றுவதற்கான எந்தவொரு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும் பொறுப்பாகும்.

TNULB ACT 2023 இன் பிரிவு 199 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி மற்றும் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 வழிகாட்டு முறைகள்ஆகியவற்றை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்கள் 2025 தயாரிக்கப்பட்டுள்ளது.

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி, கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அல்லது குப்பைகள் தனித்தனியாக சேகரிக்கப்பட்டு அகற்றப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இதன் தொடர்பாக, பின்வரும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகின்றன.

**01. வரையறைகள்**:- இந்த வழிகாட்டுதல்களில் இருப்பதைத் தவிர கீழ்கண்ட வரையறைகள்:

**(அ) கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள்**

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் என்றால், கட்டுமானப் பொருட்கள், குப்பைகள் மற்றும் இடிபாடுகள் ஆகியவற்றின் கழிவுகள், கட்டுமானம், புனரமைத்தல், பழுது மற்றும் இடிமானத்தின் இதில் எஃகு, அலுமினியம், மரம் மற்றும் மறுபயன்பாட்டுக்கு பெறப்படும் கழிவுகள் அல்லது மறுசுழற்சிக்காக தற்போது மீட்கப்படும் பிற கூறுகள் அடங்காது.

**(ஆ) கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை மையம்.**

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு தளம் என்பது, உரிய அளவுருக்களைப் பின்பற்றி ஒவ்வொரு மண்டலத்திற்கும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நியமிக்கப்பட்ட மையம் ஆகும்.

**(இ) கழிவுபொருட்கள் மற்றும் குப்பைகள் (செயலற்றவை):**

தூசி, சாலையினை சுத்தம் செய்த கழிவுகள், மழைநீர் வடிகால் வண்டல், சாம்பல், உடைந்த செங்கற்கல், சிமெண்ட் கலவை, உடைந்த கண்ணாடி, கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மற்றும் மெல்லிய மக்காத மற்றும் மக்கும் கழிவுகள் ஆகியவை அடங்கும். ஆனால் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் நிராகரிக்கப்பட்ட அபாயகரமான கழிவுகள் மற்றும் **இணைப்புல்-3 ல்** சுட்டிக்காட்டப்பட்ட கழிவுகள் இதில் அடங்காது.

(ஈ) **இடிமானம்**: ஜாக்ஹாம்மர்கள், புல்டோசர்கள் மற்றும் இது போன்ற வழிகளில் மேற்கொள்ளப்படும் இடிமானங்களின் மூலம் உருவாகும் கழிவுகளில் பல்வேறு விதமான கழிவுகளும் கலந்து வருவதால் (எதிர்பாராத கட்டிட இடிபாடுகள், பூகம்பம், தீ மற்றும் எதிர்பாராத பேரழிவுகள் தவிர) இதுபோன்ற முறையிலான கட்டிட இடிமானங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

(உ) **அகற்றுதல்**: மறுபயன்பாடு அல்லது மறுசுழற்சிக்கு உதவும் வகையில் பிரிக்கப்பட்ட கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளைப் பெறுவது Reverse construction என்று பொருள்படும். மேலும் ஏற்கனவே உள்ள ஒரு கட்டமைப்பின் ஒரு பகுதி அல்லது முழுவதுமாக அகற்றும் போது இந்த நடைமுறை தவறாமல் நடைமுறைப்படுத்தப்படும்.

(ஊ) **அங்கீகரிக்கப்பட்டவணிகர்**: உரிய ஆய்வுக்குப் பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரப்பினர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் பட்டியலிடப்பட்ட லாரி உரிமையாளர்கள், ஒரு கட்டிட உரிமையாளரின் தளத்திலிருந்து கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி செய்ய கூடிய கட்டிட இடிபாடுகள் சேகரிக்க தகுதியுடையவர்களால் **இணைப்பு 1-ல்** குறிப்பிட்ட இடங்களுக்கு கொண்டு செல்வது.

(எ )**உரிமையாளர்**: பில்டர்/டெவலப்பர் அல்லது எந்தவொரு நபரையும் உள்ளடக்கியது. மேலும் தற்போது எந்தவொரு இடத்தையும் சொந்தமாகவோ, உரிமையாளருக்கு வாடகை செலுத்தி ஒருவரின் பயன்பாட்டில் ஆக்கிரமித்துள்ள கட்டிடம், கட்டிடங்களின் ஒரு பகுதி மற்றும் காலிமனை ஆகியோர் அடங்குவர். மேலும் கூட்டு ஒப்பந்தம் மூலம் உரிமைப்படுத்தப்பட்டவர், ஒரு கட்டிடம் மற்றும் காலி மனையினை பயன்படுத்தும் நபரும் இதில் அடங்குவர்.

(ஏ) **கழிவுகள் உருவாக்குவோர்.** எந்தவொரு தனி நபர் சங்கம் , இந்திய ரயில்வே, விமான நிலையம், துறைமுகம் கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை உருவாக்கும் அனைத்து கட்டுமானங்கள், இடிமானங்கள் மேற்கொள்ளும் குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியோர் கழிவுகள் உருவாக்குவோர் என கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை விதிகளில் குறிப்பிடப்படுகிறது.. "கழிவுகள் உருவாக்குவோர்" நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களின் வெவ்வேறு வகையான கழிவு உற்பத்தியாளர்களுக்கான வரையறைகள் கீழ்கண்டவாறு :-

i. **மிகச்சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர்**: சிறிய வீடுகள் பழுதுபார்ப்பு, ஓடுகள், குளியல் தொட்டிகள், அலமாரிகள், வாஷ்பேசின்கள் உடைந்த பீங்கான் சானிட்டரி பொருட்கள் மூலம் 1000 கிலோவுக்கும் குறைவாக கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை எப்போதாவது உருவாக்கும் மிகச்சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர் **இணைப்பு** 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கழிவுகளை அளிக்கலாம்.

ii **சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர்**: கட்டிடம் புதுப்பித்தல், மறுவடிவமைப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் போன்றவற்றின் போது கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் உருவாகின்றன. ஒரு திட்டத்தின் மூலம் மொத்த கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் ஒரு மெட்ரிக் டன்னிற்கு அதிகமாகவும் ஒரு நாளைக்கு 20 MT க்கும் குறைவாக உருவாக்குவோர் இதில் அடங்குவர். கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவு உற்பத்தி ஒரு மெட்ரிக் டன்னிற்கு வரை

இருந்தால், **இணைப்பு 4 இல்** உள்ள இடத்திலும், ஒரு மெட்ரிக் டன்னிற்கு கூடுதலாக இருந்தால் **இணைப்பு 1 இல்** உள்ளவாறு செயலாக்க மையத்திலும் அளிக்க வேண்டும் .

மேலும், ஒரு திட்டங்கள் மூலம் (அ) ஒரு மாதத்திற்கு 300 மெட்ரிக் டன் கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை உருவாக்கினாலோ மற்றும்/அல்லது (ஆ) 600 சதுர மீட்டருக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட கட்டிடத்தினை இடிக்கும் பணி மற்றும்/அல்லது (இ) கட்டுமானம் அல்லது பழுதுபார்க்கும் பணிகள் 6000 சதுர மீட்டர் பரப்பளவிற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவை உள்ளடக்கியதாக இருந்தால், பெருமளவிலான கழிவுகள் உருவாக்குவோர் வகையினைச் சார்ந்தவராக கருதப்படும் தேவைகளுக்கு இணங்க வேண்டும்.

iii .**பெருமளவு கழிவுகள் உருவாக்குவோர்**: ஒரு நாளில் (அ) 20 மெட்ரிக் டன் அல்லது அதற்கு மேல் அல்லது ஒரு மாதத்திற்கு 300 மெட்ரிக் டன் கழிவு உற்பத்தி செய்யும் கழிவுகள் உருவாக்குவோர், மற்றும்/அல்லது (ஆ) 600 சதுர மீட்டருக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட கட்டிடத்தின் இடிக்கும்பணி, மற்றும்/அல்லது (இ) 6000 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டுமானம் அல்லது பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்வோர். **இணைப்பு 1 இல்** உள்ளபடி அவர்கள் கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அவர்கள் இடத்திலேயே சேமித்து, **இணைப்பு 1ல்** குறிப்பிட்டுள்ள இடத்திற்கு சென்று சேர்க்க வேண்டும்.

**iv. சேவை வழங்குநர்கள்**: குடிநீர், கழிவுநீர், மின்சாரம், தொலைபேசி,மற்றும் சாலைகள், போன்ற சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் சேவை வழங்குநர்களாக வரையறுக்கப்படுகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியில் பின்வரும் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்கள் "சேவை வழங்குநர்கள்" எனக் குறிக்கப்படும்:

• பொதுப்பணித்துறை (PWD) மற்றும் மத்திய பொதுப்பணித் துறை (CPWD)

• சென்னை மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன் (CMRL)

• இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (NHAI)

• இந்திய விமான நிலைய ஆணையம், சென்னை (AAI, சென்னை)

• தமிழ் நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB)

. இந்திய ரயில்வே

• சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் (CMWSSB)

• சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA)

• தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் லிமிடெட் (TANGEDCO)

• தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC)

கட்டிடம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை சிறப்பாக நிர்வகிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியிலேயே கூடுதலாக சேவை வழங்குனர்கள் தேவைப்படின் இணைக்கலாம்

02. தெருக்கள், நடைபாதைகள், மழைநீர் வடிகால்கள், பொது இடங்கள் அல்லது காலி மனைகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் எந்த ஒரு இடத்திலும் உரிமையாளர்களால் கட்டிடக் கழிவுகள் எந்த வகையிலும் எந்த நேரத்திலும் கொட்டக்கூடாது.

03. நீரின் போக்கு , நிலத்தடி நீர் ரீசார்ஜ் ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில், செயலாக்கத் தளங்களாக பெருநகர சென்னை மாநகராட்சியால் அறிவிக்கப்பட்ட **இணைப்பு-1 இல்** பட்டியலிடப்பட்டுள்ள இடங்கள் தவிர, தாழ்வான பகுதிகளில் எந்த விதமான கழிவுகளும் எந்த நேரத்திலும் கொட்டக்கூடாது. விதிமீறல்களுக்கு அவ்வப்போது குறிப்பிட்டபடி அபராதம் விதிக்கப்படும்.

04. ஒரு கட்டுமானத் திட்டத்தின் சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் / உரிமையாளர்கள்/ டெவலப்பர்கள், ஆகியோர் அவர்களால் உருவாக்கப்படும் மற்றும் கழிவுகளை அகற்றுதல்/ செயலாக்கம் ஆகியவற்றிற்கு அவர்களே பொறுப்பாவார்கள். மேலும் திட்ட அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது பொறுப்பான நபரின் (நபர்கள்) பெயரை அவருடைய முகவரி மற்றும் தொலைபேசி எண்களுடன் குறிப்பிட வேண்டும். கட்டுமானம் அல்லது அகற்றுதல்/ இடிப்பு ஆகியவற்றின் போது கழிவுகள் உற்பத்தியை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதல்கள் **இணைப்பு-2 இல்** கொடுக்கப்பட்டுள்ளன.

05. பழுதுபார்க்கும் போது அல்லது சிறிய சீரமைப்பு பணியின் போது சிறிய அளவிலான கட்டிடம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் மற்றும் குப்பைகளை உருவாக்கும் கட்டிட ஆக்கிரமிப்பாளர்கள்/உரிமையாளர்கள் அனைத்து வகையான கட்டிடம் மற்றும் இடிபாட்டு கழிவுகள், செயலாக்க முடியாத குப்பைகளை தங்கள் சொந்த வளாகத்தில் குறிப்பிட்ட இடத்தில் சேமித்து வைத்திருக்க வேண்டும். கட்டிட வளாகத்தில் இருந்து கட்டுமான மற்றும் இடிப்பாட்டு கழிவுகளை அகற்றுதல் கட்டிட ஆக்கிரமிப்பாளர்கள் / உரிமையளர்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அகற்றும் வாகன ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் சேவைகளைப் பெறுவதற்கும், டிரான்ஸ்போர்ட்டர்களுக்கு தேவையான அகற்றுதல் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் செயலாக்க கட்டணத்கை செலுத்துவதற்கும் **இணைப்பு -8 இல்** கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பயன்படுத்தி கட்டணத்தை செலுத்தலாம். மேலும் கட்டணத்தை செலுத்துவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

06. கட்டுமான மற்றும் இடிபபாட்டுக் கழிவுகளை செயலாக்க முடியாத குப்பைகள் ஈரக் கழிவுகள், மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மற்றும் வேறு எந்த வகை கழிவுகளுடன் கலக்கக் கூடாது.

07. **இணைப்பு -3 இல்** குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அபாயகரமான கழிவுகளும் கட்டிட மற்றும் இடிபாட்டு கழிவுகளுடன் கலக்ககூடாது, மேற்கண்ட அபாயகரமான கழிவுகள் TNPCB அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களுக்கோ அல்லது அபாயகரமான கழிவுகளை அகற்றும் தளங்களுக்கோ அவற்றின் கட்டிட உரிமையாளர்/ஆக்ரமிப்போர் தங்களின் சொந்த செலவில் தனித்தனியாக அனுப்ப வேண்டும். மற்றும் தேவைப்படும் போதெல்லாம் இணக்க சான்றுகளை வழங்க வேண்டும்.

08. 7 நாட்களுக்குள் அகற்றப்படாமல் இருக்கும் கழிவுகள் (குறிப்பாக கட்டுமான மற்றும் இடிப்பாட்டுக் கழிவுகள்) பெருநகர சென்னை மாநகராட்சியால் அகற்றப்படும். மேற்கண்ட கழிவுகள் அகற்றலுக்கான செலவு, அந்தந்த வார்டு பொறியாளர்களால், **இணைப்பு - 8 இல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, அபராதத்துடன் வசூலிக்கப்படும்.

09. எந்தவொரு கட்டிடம் கட்டுவதற்கு அல்லது இடிக்க விரும்பும் உரிமையாளர்கள் கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை திட்ட முன் அனுமதியைப் பெற வேண்டும். அனைத்து கட்டிடம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் விண்ணப்பங்களும் கட்டிட மற்றும் இடிபாட்டு கழிவுகள் எதிர்பார்க்கப்படும் தன்மை மற்றும் அளவைக் குறிப்பிட்டு முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டும். அத்தகைய விண்ணப்பங்கள் அனைத்தும் 15 நாட்களுக்குள் பரிசீலனை செய்யப்படும்.

10. உரிமையாளர் /கட்டுமான நிறுவனம் அல்லது கூட்டு மேம்பாட்டாளர் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தால் திட்ட அனுமதி வழங்கப்படும்.

10.1: கட்டுமானத்தின் போது கட்டுமான கழிவு/இடிப்பாட்டுக் கழிவு மேலாண்மை குறித்து (கட்டுமானம் மற்றும் இடிப்பாட்டு கழிவு) **இணைப்பு-4ல்** கண்டுள்ளவாறு (விண்ணப்பதாரருக்கு ஒரு நகல் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பதிவிற்கு ஒரு நகல் ) விண்ணப்பம்.

10.2: தற்போதுள்ள கட்டிட வரைபட அனுமதி/கட்டப்படவுள்ள கட்டிடத்தின் வரைபடம்.

11. கட்டுமானக் கழிவு மேலாண்மைக்கான **இணைப்பு-5 இல்** குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளை பயன்படுத்தி, உரிமையாளர் / கட்டுமான நிறுவனத்தால் பல்வேறு வகையான கட்டுமான மற்றும் இடிப்பாட்டுக் கழிவுகளை தற்காலிகமாகப் பிரித்து சேமிப்பதற்கு மேலாண்மை/மறுசுழற்சி/மறுபயன்பாடு ஆகியவற்றுக்கு ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட பகுதிகளைக் குறிப்பிடுவதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் ஒரு தளத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

12. அனுமதிக்கப்பட்ட திட்டமானது, சமர்ப்பிக்கப்பட்ட கழிவு மேலாண்மைத் திட்டத்தின் ஒப்புதலின் பேரில் மட்டுமே இறுதியானது. இதன் முக்கிய நோக்கம், கழிவுகளை கொட்டுவதை குறைப்பது மற்றும் நிராகரிக்கப்பட்ட/மறுபயன்பாடு/மறுசுழற்சி கழிவுகளை மீண்டும் பயன்படுத்துவதாகும்.

13. **இணைப்பு-6 இல்** குறிப்பிடப்பட்டுள்ள படி கட்டுமானக் கழிவுகளைக் கண்காணிப்பதற்கான வடிவ அட்டவணையில் கட்டிட உமையாளர்/கட்டுமான நிறுவனம் / ஆக்கிரமிப்பாளர் பராமரிக்க வேண்டும் .மேலும் தேவைப்படும் நேரத்தில் மேற்கண்ட வடிவ அட்டவணையினை ஆய்வுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படவேண்டும்.

14. கழிவுகளை கண்காணிப்பதற்கான வடிவ அட்டவைணை மற்றும் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை திருப்திகரமாக அகற்றுவதற்கான அனைத்து ரசீதுகளின் ஆய்வு மற்றும் ஒப்புதலுக்குப் பிறகு மட்டுமே கட்டிடம் கட்டுவதற்கான பணி துவக்கச் சான்றிதழ் வழங்கப்படும்.

15 தற்போதைய கழிவுகளை கண்காணிப்பதற்கான அறிக்கையினை ஆய்வு செய்து ஒப்புதல் அளித்த பின்னரே கட்டிட உரிமையாளருக்கு பணி நிறைவுச்சான்றிதழ் வழங்கப்படும். மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நியமிக்கப்பட்ட கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள்

செயலாக்கத் தளத்தில் அகற்றியதற்கான அனைத்து ஆதாரங்களையும் பெற்ற பிறகு மட்டுமே மேற்கண்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

16. பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து புதிய கட்டுமானத்திற்கான நிறைவுச் சான்றிதழை பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே மனை வரி விதிப்பு செய்ய முடியும். மேலும் TANGEDCO/CMWSSB மூலம் கட்டிட வளாகத்திற்கு மின் இணைப்பு/தண்ணீர் இணைப்பை வழங்குமாறு கோர முடியும்.

17. சிறிய அளவிலான கட்டுமானங்கள் தொடர்பான விஷயங்களில் **இணைப்பு-7ல்** கண்டுள்ளவாறு ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நடைமுறைப்படுத்தப்படும்.

18. கட்டுமானம் மற்றும் இடிபாடு கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் பயனாளர் கட்டணங்களை செலுத்தாமல் இருக்கும் பட்சத்தில் **இணைப்பு 9 ன்** படி அபராதங்கள் விதிப்பது தவிர்க்க இயலாது.

இதன் மீது, சேவை வழங்குநர்கள், பில்டர்கள், கட்டிடங்களின் உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் தங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளும் இவ் அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள், கீழ்க்கண்ட மின்னஞ்சல் மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"swmdebriswaste@gmail.com"**

ஆணையாளர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை

## இணைப்பு -1

**செயலாக்கத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சியால் வடிவமைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவு மேலாண்மை செயலாக்க தளங்களின் பட்டியல்**

| மண்டலம் | வார்டு | வசதியின் பெயர் மற்றும் முகவரி | வசதியினை பயன்படுத்தும் மண்டலங்கள் |
|---|---|---|---|
| 4 | 37 | கட்டடுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை பதப்படுத்தும் வசதி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் | மண்டலம் 1 முதல் 8 வரை |
| 14 | 184 | கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை பதப்படுத்தும் வசதி, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் | மண்டலம் 9 முதல் 15 வரை |

## இணைப்பு - 2

**கட்டுமானத்தின் போது உருவாகும் கழிவுகளை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதல்கள்**

| வ.எண் | கட்டுமான செயல்முறை வகை | தோராய கழிவு உற்பத்தி மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கட்டுமானம் | 40 – 60 kg/m2 |
| 2 | சீரமைப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணி | 40 – 50 kg/m2 |
| 3 | முழுமையான கான்கிரீட் தளத்துடன் கூடிய கட்டிடங்களை இடிக்கும் பணி | 500 kg/m2 |
| 4 | கான்கிரீட் மற்றும் பிற வகையான தளங்களுடன் கூடிய கட்டிடங்களை இடிக்கும் பணி | 300 kg/m2 |

**இணைப்பு – 3**

**கட்டுமான தளத்தில் காணப்படும் பொதுவான பொருட்கள்**

**கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவு மேலாண்மைக்கான திட்டத்தை தயாரித்தல்**

**அபாயகரமான கழிவுகள்**

| வ.எண் | கட்டுமான வகை | பொருட்கள் |
|---|---|---|
| 1 | நிலத்தினை தோண்டும் பணி, அடித்தளம் அமைத்தல் மற்றும் மேல் கட்டுமான பணிகள் | வெடிபொருட்கள், அது தொடர்புடையபொருட்கள் மற்றும் நிலத்தினை தோண்ட பயன்படுத்தப்படும் உபகரணங்கள், |
| 2 | | எரிபொருள்கள்,வெப்பமூட்ட பயன்படும்எண்ணெய்,ஆவியாகும்/எரியக்கூடிய திரவங்கள், குளிரூட்டிகள் மற்றும் கிரீஸ் |
| 3 | | பூச்சிக்கொல்லிகள் |
| 4 | | இரசாயன கலவைகள், அடைப்பான்கள், பசைகள், கரைப்பான்கள் |
| 5 | | பிளாஸ்டிக், அக்ரிலிக்ஸ் மற்றும் சிலிக்கா |
| 6 | | எலக்ட்ரானிக் பேலஸ்ட்கள், PCBகள், மின்மாற்றிகள், மின்தேக்கிகள், சுவிட்ச் கியர்கள், லீட் கேபிள் மற்றும் எண்ணெய் மற்றும் ஜெல் நிரப்பப்பட்ட கேபிள்கள் |
| 7 | | தார் மற்றும் தார் பொருட்கள் (பிட்டுமின் மற்றும் நீர் புகா வண்ணம் தடுக்கும் கலவைகள்) |
| 8 | | கான்கிரீட் தளம் அமைக்க உருவாக்கும் உலோக மற்றும் மர தளங்களில் பயன்படும் எண்ணெய் மற்றும் கான்கிரீட் தூண்கள் அமைக்க பயன்படும் பாக்ஸ்களில் பயன்படுத்தும் எண்ணெய். |
| 9 | | கல்நார் பொருட்கள் - காப்பு, ஓடுகள் |
| 10 | | பொருட்களை சிப்பம் கட்ட / சேமிக்க உபயோகிக்கப்படும் பேக்கேஜிங் (சிமெண்ட் பைகள்,அட்டைப்பெட்டிகள்,கொள்கலன்கள் மற்றும் பிளாஸ்டிக் கவர்கள்) |
| 11 | நிறைவுறும் மற்றும் உட்புற அழகூட்டும் பணிகள் | தார்ப்பாய் |
| 12 | | அழுத்தப்பட்ட வாயுக்கள்/சிலிண்டர்கள் |

| | | |
|---|---|---|
| 13 | | பேட்டரிகள் |
| 14 | | மரத்தூள் |
| 15 | | 'வண்ணப்பூச்சுகள், நிறமிகள், சாயங்கள் மற்றும் ப்ரைமர்கள் |
| 16 | | பாதரசம் கொண்ட விளக்குகள், ஒளிரும் விளக்குகள் ஆலஜன் விளக்குகள், ஆர்க் விளக்குகள், புற ஊதா விளக்குகள்,<br>உயர் அழுத்த சோடியம் விளக்குகள், பாதரச ஆவி விளக்குகள், நியான் விளக்குகள் மற்றும் ஒளிரும் விளக்குகள் |
| 17 | | பாதரசம் உள்ள சாதனங்கள், ரிலேக்கள், கட்டுப்பாட்டு சாதனங்கள், தெர்மோஸ்டாட்கள், வெப்பமானிகள்,மானோமீட்டர்கள் மற்றும் பாதரசம் கலந்த கழிவுகள் |

**இணைப்பு - 4**

**தலைப்பு: கட்டுமானத்தின் போது கட்டுமான கழிவுகள்/இடிபாட்டுக் கழிவு**

**மேலாண்மைக்கானவிண்ணப்பம்**

**(விண்ணப்பதாரருக்கு ஒரு நகல்,பெருநகர சென்னை மாநகராட்சி பதிவிற்கு மற்றொரு நகல்)**

**1. விண்ணப்பம் (கீழே உள்ள வழிமுறைகளுடன்)**

a. விண்ணப்பதாரரின் பெயர்

b. விண்ணப்பதாரரின் தொலைபேசி எண்

c. விண்ணப்ப குறிப்பு எண் (பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டும்):

d. வேலைக்கான திட்ட அனுமதி / விண்ணப்பத்தின் குறிப்பு:

**2. கட்டுமானம் மற்றும் இடிபாட்டு நடவடிக்கை வகை (தயவுசெய்து விவரங்களைக் கொடுங்கள்)**

**a. புதிய கட்டுமானம் (கீழே உள்ள வழிமுறைகளுடன்)**

i. 5000 சதுர அடிக்கும் குறைவானது

ii. 5000 முதல் 15000 சதுர அடி வரை

iii. 15001 முதல் 50000 சதுர அடி வரை

iv. 50001 முதல் 100000 சதுர அடி வரை

v. 100001 முதல் 200000 சதுர அடி வரை

vi. 200000 சதுர அடிக்கு மேல்

vii. வேறு ஏதேனும் கட்டுமானம் (தயவுசெய்து விவரங்களைத் தரவும்)

**b. முழுமையான கான்கிரீட் தளத்துடன் கூடிய கட்டிடங்களை இடிக்கும் பணி (pucca building)**

i. 5000 சதுர அடிக்கு குறைவாக

ii. 5000 சதுர அடி மற்றும் அதற்கு மேல்

**c. கான்கிரீட் மற்றும் பிற வகையான தளங்களுடன் கூடிய கட்டிடங்களை இடிக்கும் பணி (semi pucca building)**

**d. புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தல்**

**3. கட்டுமானம் / இடிபாட்டுக் கட்டமைப்பின் இடம்**

a. குடியிருப்பவரின் பெயர்

b. குடியிருப்பவரின் கடித தொடர்பு முகவரி

c. கட்டுமானம் / இடிபாட்டுக் கட்டமைப்பின் இருப்பிட முகவரி

d. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்

e. பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு பெயர் & எண்

**4. மதிப்பிடப்பட்ட கழிவு கள்உருவாக்கம்**

| வரிசை எண். | விவரங்கள் | தரவு |
|---|---|---|
| 1 | கட்டுமான வகை / இடிப்பு | |
| 2 | பரப்பளவு(சதுர மீட்டரில்) | |
| 3 | கீழே உள்ள குறிப்புகளின்படி கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் | |
| 4 | கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளின் மதிப்பிடப்பட்ட அளவு | |
| 5 | செயல்பாட்டின் மதிப்பிடப்பட்ட தொடக்கம் | |
| 6 | செயல்பாட்டின் மதிப்பிடப்பட்ட முடிவு தேதி | |

5.கழிவுகளை அகற்றுவதற்கான அடையாளம் காணப்பட்ட செயலாக்கத் தளம் (குறிப்புகளைப் பார்க்கவும்):

6.பாதுகாப்பான அகற்றலுக்கான தேவை (குறிப்புகளைப் பார்க்கவும்): நிறைவு / காலாண்டு

## உறுதிச்சான்று

எங்கள் தளத்தில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை நிர்வகிப்பதற்கான மேற்கண்ட விண்ணப்பம் எங்கள் புரிதலுக்கு ஏற்றவாறு உண்மையானது என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன். பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றல் திட்டத்தின் உறுதிப்படுத்தல் கட்டுமானம் அல்லது இடிபாட்டுக்கான ஒப்புதல் அல்ல என்பதையும், முன்மொழியப்பட்ட கட்டுமானம், இடிபாடு அல்லது புதுப்பித்தலுக்கு தேவையான திட்ட ஒப்புதலைப் பெறுவோம் என்பதையும் நாங்கள் இதன் மூலம் தெரிந்துக்கொள்கிறோம்.

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் வரைமுறையற்ற வகையில் சேமிக்கப்படவோ அல்லது அகற்றப்படவோ கூடாது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம் என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன். பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுமானம் மற்றும் இடிபாடுக் கழிவுகளின் வழிகாட்டுதல்களை நாங்கள் பின்பற்றுவோம்.

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதற்கான கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் வழிகாட்டுதலின் கீழ் தேவைப்படும் ஆவணங்களை நாங்கள் வழங்காவிட்டால், கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக்கான நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படாது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம் என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகிறோம்.

தேதி

இடம் விண்ணப்பதாரரின் கையொப்பம்

விண்ணப்ப எண் குறித்த பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலக ஆணை

விண்ணப்பம் _________ தேதியில் பெறப்பட்டுள்ளது என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி இதன் மூலம் உறுதிப்படுத்துகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி பதிவுகளில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்ப எண் ______________

தேதி முத்திரையுடன் கூடிய கையொப்பம்

**பாதுகாப்பாக கழிவுகள் அகற்றல் மற்றும் பணி முடிவுற்றதை பெருநகர சென்னை மாநகராட்சி உறுதிப்படுத்தல்**

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் வழிகாட்டுதல்களின் விதிகளின்படி அகற்றப்பட்டுள்ளது என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி இதன் மூலம் உறுதிப்படுத்துகிறது.

தேதி முத்திரையுடன் கூடிய கையொப்பம்.

இடம்

**விண்ணப்பத்தை நிரப்புவதற்கான வழிமுறைகள்:**

**1. விண்ணப்பம்**

a. உரிமையாளர்/குடியிருப்பாளரின சார்பாக அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரரின் பெயர் வழங்கப்பட வேண்டும்.

b. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரரின் தொலைபேசி எண் வழங்கப்பட வேண்டும்.

c. விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதை பெற்றுக்கொண்டதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தால் குறிப்பு எண் வழங்கப்படும்.

d. மேலே உள்ள மூன்று தேடல் விருப்பங்களில் ஏதேனும் ஒன்றின் மூலம் விண்ணப்பத்தின் நிலையைக் காணக்கூடிய வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் ஆன்லைன் தரவுத்தளம் பராமரிக்கப்படும்.

**2. கட்டுமான வகை**

கட்டுமானத்தின் வகை மற்றும் வடிவ அட்டவணையின்படி இருக்க வேண்டும். தேவையானதை உறுதிப்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தகவல்களைக் கோரலாம்.

3. முழு முகவரி வடிவ அட்டவணையின் படி வழங்கப்பட வேண்டும். தவறான அல்லது போதுமான தகவல்கள் இல்லாதது தீவிரமாகக் கருதப்படும் மற்றும் திட்ட ஒப்புதல்களை ரத்து செய்ய வழிவகுக்கும்.

4. கழிவு உற்பத்தியை மதிப்பிடுவதற்கு பின்வரும் தரவினைப் பயன்படுத்தலாம்.

| வரிசைஎண். | கட்டுமான செயல்முறை | தோராய மதிப்பீட்டின் வகை கழிவு உற்பத்தி |
|---|---|---|
| 1 | கட்டுமானம் | 40-60 கிலோ/ச.மீ |
| 2 | புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்க்கும் பணி | 40 – 50 கிலோ/ச.மீ |
| 3 | முழுமையான கான்கிரீட் தளத்துடன் கூடிய கட்டிடங்களை இடிக்கும் பணி (pucca building) | 500 கிலோ/ச.மீ |
| 4 | கான்கிரீட் மற்றும் பிற வகையான தளங்களுடன் கூடிய கட்டிடங்களை இடிக்கும் பணி (semi pucca building) | 300 கிலோ/ச.மீ |

**5. அகற்றும் இடம்:**

கீழே உள்ள பட்டியலிலிருந்து, கழிவுகளை அகற்றுவதற்கு விருப்பமான அங்கீகரிக்கப்பட்ட இடத்தைத் தேர்ந்தெடுக்கவும். அவ்வப்போது பெருநகர சென்னை மாநகராட்சியால் கூடுதல் செயலாக்க தளங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படலாம். கூடுதல் விவரங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஒரு மெட்ரிக் டன்னிற்கு குறைவாக கழிவுகள் உற்பத்தி செய்யும் மிகச் சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர் இத்தளத்திலேயோ அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி வலைத்தளங்களில் பதிவு செய்தால், கட்டிட கழிவுகள் இலவசமாக எடுத்துச் செல்லப்படும்

| மண்டலம் | வார்டு | இடம் | GPS குறியீடு | |
|---|---|---|---|---|
| 1 | 7 | பக்கிங்காம் கால்வாய் சாலை, சாத்தங்காடு, திருவொற்றியூர். (லாரி நிலையத்திற்கு அருகில், மண்டலம்-1) | 13°9'15.65"N | 80°17'8.28"E |
| 2 | 20 | பகுதி– 5, காமராஜ் சாலை | 13° 9'42.90"N | 80°16'1.56"E |
| 3 | 26 | வீடற்றோர் இரவு தங்குமிடம் அருகே CMDA லாரி முனையம் (மாதவரம் Truck Terminal பின்புறம்) | 13° 8'51.15"N | 80°13'28.38"E |
| 4 | 37 | கொடுங்கையூர் குப்பை கொட்டும் மைதானம், தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை | 13° 08' 02" N | 80° 16' 09" E |
| 5 | 58 | பழைய கால்நடை கிடங்கின் ஒரு பகுதி, அவதானம் பாப்பையர் சாலை, சூளை (கார்ப்பரேஷன் பள்ளிக்கு எதிரே) | 13° 05'26.1"N | 80°15'53.8"E |
| 6 | 70 | | | |
| 7 | 86 | வானகரம் சாலை, அத்திப்பட்டு குப்பைக் கொட்டும் வளாகம் | 13°05'58.8"N | 80°08'58.6"E |
| 8 | 101 | 1வது பிரதான சாலை, ஷெனாய் நகர் (கஜலட்சுமி காலனி அருகில்) | 13° 4'42.82"N | 80°13'23.15"E |
| 9 | 120 | லாயிட்ஸ் காலனி (கார்ப்பரேஷன் ஐடிஐ பயிலகம் அருகில்) | 13°3'0.69"N | 80°16'21.64"E |
| 10 | 127 | குருசிவா தெரு, எஸ்.எம் பிளாக், ஜாஃபர்கான்பேட்டை, கோடம்பாக்கம் (ஆர்-10 எம்ஜிஆர் நகர் காவல் நிலையம் அருகில்) | 13°03'70.06"N | 80°20'16.21"E |
| 11 | 143 | நொளம்பூர் கட்டம் II, 2வது பிரதான சாலை (மதுரவாயல் தாலுகா அலுவலகம் அருகில்) | 13°04'40.8"N | 80°17'32'76"E |
| 12 | 158 | நந்தம்பாக்கம் TPF, அடையார் ஆற்றங்கரை அருகே Dn - 158 | 13°02'20646"N | 80°10'24.1"E |
| 13 | 174 | வேளச்சேரி மெயின் ரோடு, குருநானக் கல்லூரிக்கு அருகில், வேளச்சேரி மயான பூமி | 12°59'23.14"N | 80°13'19.24"E |
| 14 | 186 | 200 அடி ரேடியல் சாலை, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் | 12°95'00.92"N | 80°22'86.30"E |
| 15 | 197 | கங்கையம்மன் கோவில் தெரு விரிவாக்கம், காரப்பாக்கம் (தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகத்திற்கு அருகில்) | 12°54'58.33"N | 80°14'11.03"E |

6. கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதற்கான காலம் கீழே உள்ள வரிசை எண்1 இல் உள்ளதைப் போன்று இருக்க வேண்டும். பாதுகாப்பான கழிவு அகற்றல் அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அறிக்கையிடும் காலம்**

a. 1000 கிலோவிற்கும் குறைவான அளவிற்கு : பணி நிறைவுற்ற பிறகு.

## இணைப்பு - 5

## சேமிப்புப் பகுதி அளவு மதிப்பீட்டு அட்டவணை

| திட்டக் கட்டமைப்புப் பகுதியின் அளவு | கழிவுகள் சேமிப்புப் பகுதியின் அளவு |
|---|---|
| <5000 சதுர அடி | 80 சதுர அடி |
| 5001 – 15,000 சதுர அடி | 125 சதுர அடி |
| 15,001 – 50,000 சதுர அடி | 175 சதுர அடி |
| 50,001 – 100,000 சதுர அடி | 225 சதுர அடி |
| 100,001 – 200,000 சதுர அடி | 275 சதுர அடி |
| > 200001 சதுர அடி | 500 சதுர அடி |

## இணைப்பு - 6

## கட்டுமானக் கழிவு மேலாண்மை கண்காணிப்பு வடிவம்

| கட்டுமானக் கழிவு மேலாண்மை – பதிவுத் தாள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் & முகவரி: | | | | | | | |
| வ. எண் | கட்டுமானப் பொருட்கள் | திட்டத்திற்காக முன் மொழியப்பட்ட மொத்த அளவு (கிலோ) | தளத்தில் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் கழிவுகளின் அளவு (கிலோ) | மறுசுழற்சி/ மறு பயன் பாட்டிற்காக அனுப்பப்பட்ட கழிவுகளின் அளவு (கிலோ) | பதப்படுத்தும் மையங்களுக்கு அனுப்பப்பட்ட கழிவுகளின் அளவு (கிலோ) | மறுசுழற்சி செய்யப்படும்/ மீண்டும் பயன்படுத்தப்படும் கழிவுகள் அனுப்பப்படும் இடம் | ஸ்கிராப் டீலர் பெயர்/ULBகள் பொருந்தக்கூடியவாறு |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

## இணைப்பு-7

### சிறிய அளவிலான கட்டுமானத் திட்டங்களுக்கான வழிகாட்டுதல்கள்

- ✓ பொதுமக்களுக்கான விழிப்புணர்வு திட்டங்கள் தொடங்கப்படும், இது முக்கியமாக கட்டுமானக் கழிவு மேலாண்மை நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பற்றிய தகவல்களைப் பரப்புவதில் கவனம் செலுத்தும்.
- ✓ இந்தத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக ஒரு பயனாளர் நட்பு வாடிக்கையாளர் சேவை உதவி எண் (கட்டணமில்லா எண்) உருவாக்கப்படும்.
- ✓ சென்னையில் ஒரு மைய இடத்தில் உதவி மையம் செயல்படும்.
- ✓ உதவி எண்ணை அழைத்தவுடன், அந்தந்த பெருநகர சென்னைமாநகராட்சி மண்டல அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும்.
- ✓ பெருநகர சென்னைமாநகராட்சி அதிகாரிகள் ஒரே நேரத்தில் பல இடங்களிலிருந்து கழிவுகளை எடுக்க வாகனங்களை அனுப்புவார்கள்.
- ✓ கழிவுகளை எடுத்த பிறகு, பெருநகர சென்னை மாநகராட்சியின் கழிவுகளை செயலாக்கம் செய்யும் பகுதியில் சேர்க்கும் பணி மேற்கொள்ளப்படும்.
- ✓ கழிவுகள் அகற்றும் பணி முடிந்ததும், பெருநகர சென்னைமாநகராட்சி அதிகாரிகள் அழைப்பு மைய இடத்திற்குத் மீண்டும் பணி முடிவுற்ற அறிக்கையினை அளிப்பார்கள்.

## இணைப்பு – 8

### சேவை கட்டணங்களுக்கான விளக்கங்கள்

### பகுதி I –பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் தவிர மற்ற கழிவு உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய சேவை கட்டணங்கள்

| வ. எண் | கழிவு உற்பத்தியாளர்களின் வகை (பெருமளவு கழிவு உற்பத்தியாளர் களைத்தவிர) | சேவைக் கட்டணங்கள் ரூபாய் (INR) |
|---|---|---|
| 1. | கட்டிட மற்றும் இடுபாட்டுக் கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வதற்கு | 1. 1000 கிலோ வரை - இலவசம்<br>2.ரூ.2500.00 (ஒரு மெட்ரிக் டன்னிற்கு மேல் மற்றும் 20 MTக்கு குறைவாக) |

* இந்த விகிதங்கள் மாறுதலுக்குட்பட்டது, ஏதேனும் காரணத்தால் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேலே குறிப்பிடப்பட்ட விகிதங்களிலிருந்து சேவைக் கட்டணத்தை மாற்ற விரும்பினால், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் சேவை வழங்குநருக்கான மொத்த செலவுகளை அது ஈடுகட்ட வேண்டும்:

1. கட்டிட இடிபாட்டுக் கழிவுகளை (மனிதவளம் மற்றும் JCB போன்ற உபகரணங்கள்) ஏற்றுதல் மற்றும் கழிவு உற்பத்தி இடத்திலிருந்து கட்டிட இடிபாட்டுக் கழிவு சேகரிப்பு மையங்கள் / கழிவு பதப்படுத்தும் வசதிகளுக்கு அனுப்புவதற்கான போக்குவரத்துச் செலவு(அதாவது எரிபொருள், வாகனங்கள் மற்றும் மனிதவளத்தின் பராமரிப்பு செலவுகள்) ரூ.2500 /- 1MT/

2. கட்டிட இடிபாட்டுக் கழிவுகளை செயலாக்கப்படுத்தப்பட்ட செயலாக்கக் செலவு ஒரு MTக்கு ரூ.800/- புதிய தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்படும் போதெல்லாம்பெருநகர சென்னை மாநகராட்சி வெவ்வேறு கட்டிட இடிபாட்டுக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு தனித்தனி சேவை கட்டணங்களை பரிந்துரைக்கும்.

**பகுதி II – பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களால் செலுத்த வேண்டிய சேவைக் கட்டணங்கள்**

தங்கள் சொந்த கட்டிட இடிபாட்டுக் கழிவுகளை கட்டிட இடிபாட்டு செயலாக்கத் தளங்களுக்கு கொண்டு சென்று செயலாக்காத பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களுக்கு, சேவைக் கட்டணங்கள் பின்வரும் அடிப்படையில் கணக்கிடப்படும்

1 கட்டிட இடிபாட்டுக் கழிவுகளை மனிதவளம் மற்றும் JCB போன்ற உபகரணங்கள்வாகனங்களில் ஏற்றுதல் மற்றும் கழிவு உற்பத்தி இடத்திலிருந்து கட்டிட இடிபாட்டுக் கழிவு சேகரிப்பு மையங்கள் / கழிவு பதப்படுத்தும் வசதிகளுக்கு அனுப்பப் போக்குவரத்து செலவுகள் (அதாவது எரிபொருள், வாகனங்கள் மற்றும் மனிதவள பராமரிப்பு செலவுகள்) @Rs.5000/MT

2. செயலாக்க வசதிகளில் கட்டிட இடிபாட்டுக் கழிவுகளை பதப்படுத்துவதற்கான செலவுகள் @Rs.800/MT

**இணைப்பு – 9**

**அட்டவணை – IV**

**அபராதங்கள் (திடக்கழிவு மேலாண்மை துணைச் சட்டம் 2019 5.1& 8 ஐப் பார்க்கவும்)**

| வ.எண் | துணைப் பிரிவு / பிரிவு விதிகளின் விவரங்கள் | அபராதத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | அனைத்து பொது இடங்களிலும் கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகளை முறையற்ற வகையில் கொட்டுதல். | ரூ.5000.00 |

**வரைமுறைகளுக்கு இணங்காததற்கான அபராதங்கள்**

| வ. எண் | குற்றம் | பெருமளவு கழிவுகள் உருவாக்குவோர் / சேவை வழங்குநர் /டிரான்ஸ்போர்ட்டர் (INR இல்) | சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர் (INR இல்) | சேகரிப்பு & போக்குவரத்து சேவை வழங்குநர் (INR இல்) |
|---|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால், திறந்தவெளி மற்றும் பிற பொதுமக்களுக்கு பயன்பாட்டு பகுதிகளில் கட்டுமான | கொட்டப்படும் கட்டிட இடிபாட்டுக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.10,000 | கொட்டப்படும் கட்டிட இடிபாட்டுக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு 5,000. | கொட்டப்படும் கட்டிட இடிபாட்டுக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.6,000. மேலும் , பெருநகர சென்னை மாநகராட்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை கொட்டுதல். | | | அதிகாரிகள் மூலம், வாகனத்தை பறிமுதல் செய்யலாம், இது குற்றங்களுக்கான அபராத தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்திய பிறகு வாகனங்கள் விடுவிக்கப்படும். |
| 2 | கட்டிட இடிப்பாட்டுக் கழிவுகளை வேறு எந்த கழிவுகளுடன் கலத்தல் மற்றும்/அல்லது கட்டிட இடிபாட்டுக் கழிவுகளை பிரித்து சேமிக்கத் தவறுதல். | கட்டிட இடிபாட்டுக் கழிவுகள் கலப்பதற்கு டன்னுக்கு ரூ.15,000 . | கட்டிட இடிபாட்டுக் கலப்புக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.7500. | கொட்டப்படும் கட்டிட இடிபாட்டுக் கழிவுகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 8,000 மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி,யின் அதிகாரிகள் மூலம், வாகனத்தை பறிமுதல் செய்யலாம், குற்றங்களுக்கான அபராத தொகையான பெருநகர சென்னை மாநகராட்சிக் கு செலுத்திய பிறகு வாகனங்கள் விடுவிக்கப்படும். |
| 3 | கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் சமர்ப்பித்து ஒப்புதல் பெறாமல் கட்டுமான, இடிபாடு அல்லது புதுப்பித்தல் பணிகளைத் தொடங்குதல். | i. முன்மொழியப்பட்ட கட்டுமானப் பரப்பளவு (a)கட்டுமானம் அல்லது பழுதுபார்க்கும் பணி 6000 சதுர மீட்டர் வரை மற்றும் / அல்லது (b) இடிபாடு 600 சதுர மீட்டர் வரை எனில் ரூ.75,000. அதன் பிறகு, ஒவ்வொரு 100சதுர மீட்டருக்கும் ரூ. 5,000 ii. ஒரு திட்டத்தில் (a) ஒரு நாளில் 20 MT | N.A | N.A |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது அதற்கு மேற்பட்ட கட்டிட இடிபாட்டுக் கழிவுகள் உருவாகும் அல்லது (b) ஒரு திட்டத்திற்கு 300 MT கட்டிட இடிபாட்டுக் கழிவுகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டால், மேலும் அது மேலே உள்ள வரிசை எண் (1) இன் கீழ் குறிப்பிட்டுள்ள திட்டத்திற்கான இடப் பரப்பளவை பூர்த்தி செய்யவில்லை என்றால், அபராதம் ரூ. 75,000 ஆகும். மேலும் கழிவு மேலாண்மைத் திட்டம் அங்கீகரிக்கப்படும் வரை கட்டுமான இடிபாடு அல்லது புதுப்பித்தல் பணிகள் தொடங்கப்படாது. | | |
| 4 | கழிவு மேலாண்மை திட்டத்தின் நிபந்தனைகளை பின்பற்றாதது | i.(அ)கட்டுமானம் அல்லது பழுதுபார்க்கும் பணி 6000 சதுர மீட்டர் மற்றும் / அல்லது (ஆ) இடிபாடு 600 சதுர மீட்டர் எனில், ஒரு நாளைக்கு ரூ.25,000 செலுத்த வேண்டும். | N.A | N.A |